# மீனம்பாக்கம் மெட்ரோவில் இரண்டடுக்கு வாகன நிறுத்தம்

சென்னை, ஜன. 3–
மீனம்பாக்கம் மெட்ரோ நிலையத்தில், இரண்டடுக்கு வாகன நிறுத்தம் நேற்று துவங்கப்பட்டது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே மெட்ரோ ரயில் இயக்கப் படுகிறது.

மீனம்பாக்கம் மெட்ரோ நிலையத்தில், இருசக்கர வாகன நிறுத்தம் உள்ளது. விமான நிலைய மெட்ரோ நிலைய வாகன நிறுத்த கட்டணத்தை விட, மீனம்பாக்கத்தில் கட்டணம் குறைவு என்பதால், அதிகமான வாகனங்கள், இந்நிலையத்தில் நிறுத்தப்படுகின்றன.

இடப்பற்றாக்குறையால், கூடுதலாக வாகனத்தை நிறுத்த முடியாத நிலை உள்ளது. இந்நிலை தவிர்க்கப்பட, மீனம் பாக்கம் நிலையத்தில், வாகன நிறுத்தம், இரண்டடுக்கு வாகன நிறுத்தமாக மாற்றப்பட்டுள்ளது.

தற்போது, வாகனங்கள் நிறுத்தப்படும் இடத்திற்கு மேல், இந்த வாகன நிறுத்தம், 9 அடி உயரத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இருசக்கர வாகனங்கள், 'ஹைட்ராலிக்' இயந்திரத்தால், உயரே கொண்டு செல்லப்படுகின்றன. இப்புது வசதியை, மெட்ரோ ரயில் இயக்க பிரிவு இயக்குனர் நரசிம்ம பிரசாத், நேற்று துவக்கி வைத்தார்.

இவ்வசதி, மேலும் சில மெட்ரோ நிலையங்களிலும் நிறுவப்பட திட்டமிடப்பட்டுள்ளன.



■ மீனம்பாக்கம் மெட்ரோ நிலையத்தில், இரண்டடுக்கு வாகன நிறுத்தத்தில் நிறுவப்பட்டுள்ள, ஹைட்ராலிக் இயந்திரம்.